உ

கணபதிதுணை.

சிவானந்தபோதம்.

இரண்டாம்பதிப்பு

இஃது,

கோ. மாணிக்கமுதலியாரால்

மநோன்மணிவிலாசம்

என்னுந் தமது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1897.

இதன் விலை அணா—உ.

சிவமயம்.

சிவானந்தபோதம்.

காப்பு.

வெண்பா.

சிவானந்தபோதகமாஞ்சித்திமுததிதந்து
பவானந்தமானவினைபாழாம் - நவானந்த
ஈசனேதானருமென்வடிவுததாளிணைஐயப
பாசமுடன்றொழுவார்பார். (௧)

தியாகராருளபோதஞ்சிவசுந்தரன்சொல்
தயாபரிவென்றுய்வடிவந்தானும்-செயாவெனவே
பொய்யாவினாயகனும்பொற்குருவாஞ்சண்முகனும்
அய்யாவுமென்னுள்ளையாம். (௨)

மூத்திபெறுமென்னெஞ்சுமூர்க்கருடனேயிணங்கி
சித்தந்ததும்பிசசிதருமன-முத்தனும
பட்டினத்தார்சாக்ஷிப்பகுத்தறிதலிந்நூலைத்
தொட்டவர்க்குமுண்டாஞ்சுகம். (௩)

பணியறுத்தலாகப்பரபோகங்கொண்டு
துணிவுறுத்தநெஞ்சுக்குச்சொல்லின்-அணியாய்
படபடென்னும்நெஞ்சம்பகருசிவானந்தத்
திடமுறுவார்தானேசிவம். (௪)

சிங்காதனமுடையசெல்வவடியார்கள்
தங்காறசிரமேறறரித்திட்டேன் - பொன்கால
ஏறறிப்புகழ்ந்தன்பாலிந்நூலென்புன்கவியால
சாற்றத்துணிந்தேனைசரண். (ரு)

நூற்பயன்.

விருததம்.

அறிவதனைமனங்கேட்கச் சிவானந்தபோதத்தை யறியநன்றாய், நெறியுடையமுத்தர்கள்தன்திருவடியிற பணியவருள்நிலைக்ககாட்டிக், குறியுடனேயனுபவதது வழியடைந்துகதிபெறவே கூறவென்றும், பிரிவறவே வாழ்ந்துசிவப்பேரானந்தம்பெருகப்பேசுமிந்நூல். (சு)

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்துதி.

நிறைந்தபரிபூரணமாய்நிற்குணமாய்நிர்மலமாய் நீ த்தனாகித், துறந்தமனத்துடையோர்க்குந்தூரியனுமாய தீதனுமாய்சசோதியாகிக், கறந்தமுலைப்பாலாகிப்பாலி லுள்ள ருசிகாட்டுங்கர்த்தனாகிச், சிறந்தகுருமாணிக்கசு வாமிகளை யெம்முளத்தில் ஞெமுதல்செய்வாம். (எ)

சமயாசாரியர்மூவர்துதி.

இசைகுருகிப்பரந்தானே யெழுந்தருளிவேண்டிய தோரின்பந்தந்து, இசைக்குளவாயெதிர்த்தவனைமதித்

டிடாச்சிவசமயமேலாய்ச்செய்து, இசைக்குளவோர்புக ழ்ந்தேத்தசிவாலயததிற்றேவாரஞ்சிறக்கவோதிப், பசைக்கருதியருள்பெருகுமூவரிணை மலரடியிற்பணிகின் றேனே. (௮)

பஜவண்ணர்அல்லமாப்பிரபுதுதி.

பத்திநிலைதவறுமற் கிருபையுமே வழுவாமற்பாரின்மீதே, யுததிசிவகணேசருசகுப்போதமுறமுறப் பூசைசெய்துகந்துஞானத், தத்துவமேயுணர்ந்துசிவந் தானுகும்பஜவணர்சாக்ஷாத்கார,முததிதருமல்லமாப்பிரமீசரிருவர்தாள்முடிகொள்வாமே. (௯)

மருத்துமலைதேசிகர்துதி.

பனனுமறைசாத்திரஙகளாகமங்கள் விரிந்தநூற்பலத்திற்சென்றே, யுனனுகினறமனத்தாலே பிறப்பிறப்பாமநோய்பலவற்றுற்றிடாமற், பொன்னுடையவம்பலவர்கழற்பணியச சிந்தையுற்றுப்பூஜைசெய்ய, வென்னைதெனறே யெனையாணட மருததுமலைத் தேசிகன்றுளிணைபூஞ்சுவோமே. (௧௦)

நூல்.

(அறிவுக்கும் மனத்துக்கும்*வாக்குவாதம்.)

[அறிவுகூறுதல்.]

ஆனநெஞ்சமேயிமைப் பொழுதாகிலுமலைவறுத்
திருந்தாயோ, போனநாளிலேநடந்ததுமிருந்கதும் புது
மைகளறியாயோ, ஈனமாகியகவலையை நீக்கியைம்பொ
றியினிலிணங்காமல், தானமொக்துநான்சொன்மொழி
கேட்டுநீசரியென்று மகிழ்வாயே. (க)

[மனங்கேட்குதல்.]

(அவதாரிகை) ஏதேது விபரீதமாக இருக்கிறது, இமைப்பொழுதாகிலும் பிரியாமலிருந்த நீ யிப்போதென்னை அன்னியமாகக்குறித்துசொற்படி கேட்கச்சொன்னதும் சநதோடமாயிற்று, ஆகிலும் உதவியானகாரியமாக விருப்பிற் கேட்கவேண்டுந்தானே, ஆதலாற்சொல்கவென்று மனங்கேட்க வறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

முத்துபெறுமழகான நெஞ்சகமேபணியறுத்தன்
மொழியக்கேணீ, சத்துசித்தானந்தபராபரமேகெதியெ
ன்றுஞ்சார்ந்திடாமன், முத்தர்களுமோதிவைத்தநூலத
னையாராய்ந்துமுனைந்திடாமற், பத்திநிலைநில்லாமற் சிந்த
னையுமோயாமற் பார்ப்பதென்னே. (உ)

---

* பாக்கள் அறிவுசொல்வது, வசனங்கள் மனதுசொல்வது.

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆயினியாதோ பரத்தைச் சாரவில்லை யெனவும், நூலினுட்பொருளை யறிந்து முனைகொள்ளவில்லை யெனவும், பத்திநிலையி னிற்க வில்லையெனவும், சிந்தனைகளை யறுக்கவில்லையெனவும், சொல்கின்றனவற்றை எக்காலத்தினுமியானறியாதவனாக விருக்கிறேன், இஃதந்தரங்கப்பாஷையாக விருக்கின்றது. மாடு, மக்கள், பெண்டீர், சுற்றம், வாணாள் முதலியனவே பொருளெனறுன்னியிருந்த வெனக்கிப்போது இடீதொன்று நான்குவகையிற் சிந்திக்கச்சொன்னீர். ஸ்பஷ்டமாகப்புலப்படுமாறு புகல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

மாடுமக்களுஞ்சுற்றமும் பெண்டிரு மாளிகையுடன்வாழ்வும, நாடுராச்சியமாண்டிடும்புகழ்ச்சியுநம்மதெனநேதேகத்தி, னூடுசென்று நீயெனதுடலியானெனவுமூன்றலுததிடுநெஞ்சே, வீடுவிட்டுயிரேகிடும் போதினில்வினைவழிநுழைநதாயே. (கூ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) தேகத்தினுளளேபுகுந்து மாடு, மக்கள், சுற்றம், பெண்டீா, உயாவாழ்வு, தேசாதிபத்தியப்புகழ்ச்சி முதலியவை சதமென்றும், தேகம் நான் எனது என்று பாராட்டி உழலுகிறுயென்றும், முடிவுகாலத்தில் வினைவழியிலே உயிரைநுழைக்கிருயெனறுஞ் சொல்லுகிருய். நீ இதுகாறுய்கூடஇருந்தையா இல்லையா ? இதுகாறு மியாதும்புகலாதிருநதவாறென்னை ? இப்போது இங்ஙனஞ் சொல்லுதற்குக் காரணமென்னை? என்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சேணீ நெஞ்சமேயுனைனிடவயத்திலேகிடந்தலைந்த
னமின்னுள், வீணிலேபலசெனனமுமெடுத்ததின்மெ
லிரநிடுமெப்போது, ஊணிலேனெனை யானறியாமலேயுத்
தமர்நோககத்தாற்,காணுமிப்படிமானிடதேகமுங் கண்
டதுமறிவாயே. (௪)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) அனேகந் திரேகத்திரபிறந்து பிறந்திறக்கின்றதாகவுஞ்சொன்னீர், அவற்றுளிம்மானிடதிரேக மருமையாக பெரியோர் கிருபாநோககத்தாறகிடைத்ததாகவுஞ்சொன்னீர், அது தெரியுமபடிக்குச் சொல்லுமென மனஙகேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

நாலுவகையோனியிலுமெழுவகையின் றோற்றத்
துளினமாக, மேலுகந்தமானிடந்தானெடுப்பதுவேய
ருமையாய்மெய்யனுகி, பாலுபோன்மனமுடைத்தாயபு
ண்ணியமேமிகுந்துபலங்கீழாய்ததள்ளி, நூலுணர்வத
ருமை நெஞ்சே யிருவினையிலொருவினையை நொறுக்
கித்தானே. (௫)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனல் மானிடதேக மெடுப்பதருமையென்று சொன்னீர், அதிலும் பெய்யனுகிக் கள்ளமற்று பாவம்போக்கி புண்ணியமிகுந்து நூலுணர்வதருமை யென்றுங் காட்டு

இன்றீர். அப்படியானல் மானிடதேகத்திலேதானே பலவிதமா யருமையாகிய தேகமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

மனிதரிலும்டறவையுண்டுவிலங்குண்டு கல்லுண்டுமரமுமுண்டு, மனிதரிலுநீர்வாழுஞ்சாதியுண்டுஅநேககுலமனிதருண்டு, மனிதரிலுமனிதருண்டு வானவருமனிதராய்வருவதுண்டு, மனிதரிலேபிறப்பறுக்கவந்ததே யருமையெனவகுத்தார்முன்னோர். (௬)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் தேக மெடுப்பது எவ்விதம்? வினையென்பது ஒன்றோ இரண்டோ? இதில் சகாயமான வினையெது? வினை வழியாய்தேகமெடுக்கிறது யாராலேயென்று மனஙகேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

எழுவகையின்றோற்றமாய்க கடந்தோறும்பலவிதமாயின்பமுற்றே, பழுதறவே தேகமருமபேய்மனமே நீசெய்தபணபினாலே, உழிதருமிக்காலத்துமொழியாமவிருவினையாலுகந்துநிறகும, கழிதருமிவ்விருவினையிலொருவினையைநோக்குவதுகடினந்தானே. (எ)

[மனங்கேட்தல்.]

(அ-கை) ஆனால் என்னாலே வினையுண்டாகிறதென்றும் வினையினாலே தேக மெடுக்கிறதென்றும சொன்னீர், வினை

வழியாய்ப் பலயோனிதோறும் எப்படிப் புகுந்து ஜநநமரணமுண்டாகிறதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

மனவாக்குக்காயத்தான்மருவுஞ்செய்கை
மலர்மணம்போலுறுஜன்மமயக்கத்தாலே
இனமாக்கும்பிறவியினிலிழுத்துக்கொண்டே
யெத்தனையோஜனமத்திலிறக்கச்செய்யும்
தனவாக்காய்பிரமமாவுஞ்சிருஷ்டிசெய்ய
தானுனைவளர்ந்திந்தத்தரணிமீதே
இனமாக்குவெம்பாசந்தன்னிற்சிக்கி
யிறந்தார்கள்பிறந்தார்களினமைநெஞ்சே. (அ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் பிறந்தாலுமிறந்தாலும் வேதாகம சாத்திரச் சொற்படி நடந்தால், தேவேந்திரபதவி பிரம்மபட்டமுதலானது மடையலாமென்று சொல்லுகிறார்களே, அது சுகமல்லவோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

முந்தஜன்மமாம்புண்ணியமிகுந்திடின் முக்கியமுண்டாகும, பிந்தஜன்மமாம்பாவமேமிகுந்திடிற் பெரியதோர்துயராகும, அந்தரெணடையுமறுத்திடிலொளிதருமரன்கழற்றுணையாகும், பந்தமானதோர் புராணங்களவேதங்கள்படைத்ததையறிவாயே. (க)

[மனங்கேட்டுதல்.]

(அ-கை) ஆனால் மும்மூர்த்திகள் பட்டமாயிருந்தாலும், தேவேசதிர புகழ்ச்சி பெற்றாலும், பின்னும் பூலோகத்திலே பிறப்பதுணடோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வாழுமாலயனுருத்திரனிந்திரன்வானவரானாலும்,
சூழுமாயுகமபிரளயந்தனனிலுஞ் சுகமுடன் வாழ்ந்தா
லும், தாழுமானதொலலுலகிலவந்துறுவர்கள் தரணி
யோர்புகழ்ந்தேறற, வீழுமநெஞ்சமே யரனடிசேர்ந்தி
டில்வினைக்குழுவிழந்தாயே. (க0)

[மனங்கேட்டுதல்.]

(அ-கை) ஆனால் வேதாகமபுராண சாஸ்திரங்களுண்டாக்கி வைத்தார்? அவற்றாலே என்னபிரயோசனம் என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

நரஜன்மத்தை யெடுத்தும்பவத்தினில் நழுகிடாதி
வ்வண்ணமே, திரமதாகவேயீசனுத்தரவினாற்செய்பவர்
புண்ணியமெனறே, வரமுடைத்தநல்வியாசருஞ்செய்த
னர்வழங்கிடுமதனாலே, பரவடியையுறுமுத்தாகளிருவி
னைப்பற்றறப்பார்த்தாரே. (கக)

[மனங்கேட்டுதல்.]

(அ-கை) ஆனால் ஒருவர் செய்கிற பாவபுணணிய மொருவருககு உண்டென்கிறது எவ்விதமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய

[அறிவுகூறுதல்.]

வேறு.

ஒருவர்செய்தபாவபுண்ணியமொருவர்க்
குண்டென்றுசொல்லுகின்றவூமைநெஞ்சே
தருகுமவரவருயிர்க்குத்துணையார்சொல்வாய்
தந்தைதாய்பபெண்டுபிள்ளை துணையுமாமோ
வருகுமந்தவியாதிகளும்வினைதானல்லோ
மக்கள்பெண்டுதந்தைதாய்வாகைக்கொண்டு
திருகுமவர்பின்னொருவர்க்கிந்ததுண்டோ
திருஷடாந்தங்கண்டுநீதெளிந்திடாயே. (கஉ)

[மனங்கேட்குதல்]

(அ-கை) அப்படியானால் புராணங்களிலே ஒருவர்செய்த பாவபுண்ணியம மற்றொருவருக்குண்டென்று பொய்சொல்ல வேண்டியதென்னவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

பாசபந்தமானதொருமூடர்க்கிந்தப்
பற்றுதலைவையாட்டால்நம்பமாட்டார்
ஆசைகொண்டுசெய்யார்கள்விகாதஞ்செய்வார்
அதனாலேபொருத்தமவைத்துச்சொன்னதல்லால்
நேசமிதுபோலவேபகைத்தார்பாரு
நீங்கினல்வேறுகெதிநிலைதப்ோாக்குண்டோ
மோசமிதுநமபாதேநெஞ்சேகேளு
முனைந்தவர்க்குச்செய்தபலனைமுடியுந்தானே.

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் ஒருவர்க்கொருவர் நன்மை தின்மைக் கூட்டுறவில்லையே, அப்படியிருக்க, ஒருகுடும்பத்திலே பந்து ஜனங்களில் தாங்கள் ஒன்றுக்கொன்று பிறவற்றிற் கிடங்கொடாமலும் உள்ளுக்குள்ளே அனேக விகற்பத்தோடு மனம பேதித்து வாழ்கிறார்களே, எந்தப்பற்றுதலைகொண்டு ஒன்று போலிருக்கிறார்களென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

பெண்ணாலும்பொன்னாலும்பூமியாலும்
பெருக்கவேயிச்சைகொண்டொன்றுக்கொன்று
தின்னார்களுறவாடிச்செத்தாரல்லாற்
சேர்ந்துமனமொன்றாகிச்சிறந்திட்டாரோ
கண்ணாலேபார்த்துநீசுகங்கண்டாயே
கவலைக்கேயாளாகிக்காந்ததிழந்துப
புண்ணாகிப்பிறப்பிறப்பிற்புகுந்திட்டாய்நீ
பூமலர்த்தாடுணையென்றுபுகழ்வாய்நெஞ்சே.(௧௪)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் வினை வழியே யுயிரித்தேகத்தை விட்டினிமேற் றேக மெடுக்கிற தெந்ததேகமோ வதைதெரியும்படியும் இத்தேகத்தைவிடும்போது யாதொருகுறிகளுண்டோவென்றும் மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வெண்பா.

தேகந்தனிற்பொறியுஞ்சீராம்புலன்கரணம்
ஆகந்துறக்குமப்போதந்நேரம் - போகமது

எவ்விடத்துச்சென்றதோயேற்குக்கடவழவம்
அவ்விடத்தைநன்றாயறி. (க௬)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் வினைப்பயனுமறிந்தேன், இந்த அருளையாகியமானிடதேகம்வந்ததுமறிந்தேன், வேதாகமபுராணசாத்திரங்களது கட்டுப்பாடு மறிந்தேன், பிறப்பிறப்பென்கிற விவரமுமறிந்தேன், வினைவழியே தேகமெடுக்கிற தென்னும் விவரத்தையும் என்னால் வினையுண்டாகிற தென்பதையு மறிந்தேன், ஒருவர்க்கொருவர் நன்மை, தீமை, உதவியில்லை யென்பதுமறிந்தேன், ஒரு குடும்பத்திலே பலஜனங்களொன்று போற் கூடி வாழ்கிற பந்தத்தையுமறிந்தேன், எல்லாமுள்ளபடி ஒத்துக்கொண்டேன், அரனது திருவடி நிழலையடைகிற தே சுகமென் றாசைகொண்டேன், இத்தனைநாளாக வென்னை நம்பியிருந்த குடும்பத்தாரெல்லாம இளந்தைகளாகவிருக்கிற படியினாலே யவர்களை விட்டு விட்டால் வேறு கெதியின்றி அவர்கள் வருந்துவ ராதலா லவர்களை பக்குவகாலபரியந்த மிருந்துகாக்கவேண்டுமென்று பரிதாபப்படுகின்றமையா லதற் கொருவயனுஞ் சொல்க வென்று மனம் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

விருத்தம்.

அவரெல்லாமிருக்கவிப்போதுன்னையேம
னழைத்துவிடிலியாதுசெய்வாயழகுநெஞ்சே
யிவர்களுக்குப்பிழைக்குமவகைதிருமபிவந்தே
யேதுவாய்முடிபபதுணடோ வெண்ணிப்பாரு

தவறிநீகடம்விட்டுப்போகும்போது
தான்கூடமாண்டாரோபிழைப்பில்லாமல்
அவரவர்க்குச்சிவன்றுணையெனறெண்ணிடாம
லேயத்தாலிப்படியேயலேவுற்றாயே. (கக)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனாலறியலானேன், இனிமேற் பாசபந்தத்தில் வீழ்வேனோ? திருவடியை யடையாமலிருப்பேனோ? ஆனாலி ன்னுங் கொஞ்சககாலம பொறுத்துத்தான திருவடியை யடை வதற்கேது பண்ணிககொள்ளக கூடாதோ? இப்போது தா னேதணிநது கொளளவேணுமோவென்று மனங்கேட்க அ றிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]

காயமனவாக்குதான்றளர்ந்தபோது
கருத்தழிந்தேயுறுதியற்றுப்பாசமீறி
நேயமந்தமாய்கையினிற்பற்றிக்கொணடால்
நெறறிக்கண்படைத்தவர்தானிலேபபிபபரோ
மாயமனமேயிந்தககாயநதானும
வல்லமையோவெததனை நாள்வாழுமோசொல்
தாயமதுநிலேயல்லவென்றுமுன்னோர
கண்ணொளிமழுஙகுமுனமனகதியுறறாரே. ()

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்படியானால் சாவவு மச்சங்கொண்டேன், இனி திருவடி யடைதற்குப் போநத வழி சொல்லென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது

[அறிவுகூறுதல்.]

வெண்பா.

முந்திபரிபூரணமாய் முத்திபடைந்தவர்கள்
சிந்தைமகிழ்ந்தோதுஞ்சிவநூலை - யுந்தியுந்திப்
பார்த்தறிநீநன்றாய்பகுத்துப்பகுத்துநெஞ்சே
சேர்த்தறிநீயெனவசத்திற்செல். (௧௮)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்படியே சொல்லுகிற சில நூல்களைப்பார்த்தேன், திருவள்ளுவநாயனார் முப்பால் வைத்துக் குறள சொன்னதிலே "துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்வா னென்பான் றுணை" என்று சொற்றனரஃதென கொலென மனம் வினவ வதற் கறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

விருத்தம்.

யாவரிருக்குநிலையதனையவர்க்கே யதனினிலையமர, மூவர்முதலாம்ரிஷியோர்க்கு முழுக்கத் துறந்தோர்காமியர்க்குந், தேவரீர்க்குந்திறமுதலாய்சிறக்கக் காட்டும் கண்ணொளிபோல், நாவிலிருந்தே அஞ்சனமாய்நவின்ற மொழியென்னையகமே. (௧௯)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனால் முத்தி நிலையை மாத்திரம் தனிமையிற் பேசுகின்ற நூல்தானெவ்விதமாகச் சொல்லுமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]
வெண்பா.

தேகமெடுத்ததுவுஞ்சிந்தையுடைத்ததுவும்
போகசமுசாரதிற்புக்கதுவும - தாகமது
கொண்டுதவித்ததுவுங்கூறுங்கனவெனவே
கண்டுசொல்லுமநூலதனைக்காண (௨0)

[மனங்கேட்டதல்]

(அ-கை) ஆனல அந்த நாலும்பார்த்தேன், அதிலுளள பொருளைச சங்கையற இப்படி யிருக்குமென்று தெரிந்து கொணடாற் போதுமோ வென்று அறிவினயத்துடன மனங் கேட்க அறிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]
விருத்தம.

அறிவுக்கேசாட்சிகொணடு நூலைப்பேசி
அங்கதனைத்தானறிந்து அகத்தைநோக்கு
குறிவைத்தபடியிருந்துமெய்மையைப்பொய்யாய்க்
குற்றமென்றேபொயமையைத்தானபொய்யாய்க்கண்டு
நெறியுற்றேயிருவினையுந்நீக்கிப்போட்டு
நேசமுடனீ - னுடனபாசமனைவைத்து
பிறிவற்றுஒனறுகிவாழுவாகும
பேதித்துபம்பாகாத்தபேணிக்கூடே. (௨க)

[மனங்கேட்டதல்]

(அ-கை) அந்தப்படிதானே யனுபவிக்கிறதா? மற்றொருவருடைய சகாயமும் வேண்டி யிருக்குமா என்று மனங் கேடக அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]
வேறு.

புகர்ச்சமயமாகின்ற பலசமயந்தன்னிலே புகுந்தி டாமல், அகச்சமயமாகின்ற சிவசமயத்திசைக்கே ய கப்பட்டானீ, மிகப்பெரிதாம புகழினையீபடைத்திருந் தும் பெரியோரைமேவிடாமல, தகைபபடடவே பிறவி யென்றநோய்க்குளளே சிக்கிததான்தளர்வதேனோ ()

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனல் பெரியோர்களைச் சாரவும் வேணடு மோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

பெரியோரைச்சாராமலாகந்தேயோடுசெய்து டேசிடாமல், தூரியமாகிந்தநிலைசிவபூஜை செய்யாமல் சுற்றிச்சுற்றி, அரிபயனுங்காணாப்பரமசிவமென்றதையு மறிந்திடாமல், சரியென்றுவீண்பயனுங்கொண்டது வே கோலமாய்ச்சாதிக்காய (௨௩)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனல தெளிந்த பெரியோர்களுக்குஜகத்திலே பிரயோஜனமில்லையே, எவ்விடத்திலிருப்பார்களோ அவர்க ளைக்கண்டு தரிசிக்கலாகுமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]
வேறு.

தெளிந்த்துறவியிகந்தனிலே தேகப்பிராரத்துவப் படிக்கு, பொழிந்தேகரணத்தனுபோகப் புவனத்திருந்

றுமெச்செயலும், ஒழிந்துசிந்தைதெளிவுற்றே ஒன்றே சிவமெனறிருப்பாாச, ளிழிந்தபெருமவனைக்கொண்டே றுவார்களிசதரோ. (உச)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனல் ஒகததில சஞ்சரிக்கிறதினல் பெரிபோாகளுக்கு இடறுவராதோ வென்று மனங் கேட்க அறிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]

கருவியகன்றிவ வுலகததைக்கனவென்றிருககக்கரு ந்ததனுள், ஞருவைகககணடொப்புவமை யற்றுளரு மபுறமபுமொன்றாகிக், குருவைப்பணிந்து பூரணத்தில குலாவுமடியாாஜகந்தனிலே, மருவபபொருந்திவா முநதாலுமமாசற்றிருப்பாாவலலவரே. (உரு)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனல் விபரீதமிருந்து வந்ததானல் அதை நீக்கிக் கொள்ள வலலமையுணடோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]

முந்தவிருந்தவஞ்ஞானமூடமானசத்தியையும்,பந்தமறவேதுணிநது பராபரனை ததினமுமைகைக்கொணடு, சிந்தைதெளிநதே குருபரனைச சிவமென்றெணணுந்துணிவதனல், தொந்தமறுத்துச்சிவானந்தச் சோதியதுவாய்ச்சுகிப்பாரே. (உசு)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்போப்பட்ட பெரியோாகள எந்தச்சாதியா யிருந்தாலும் தொண்டுபடலாகுமோ வென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சாதிபேதந்தனைக்குறித்துத்தயங்கிமயங்கிதநளராதே
சாதியாவதெவரறிவர்சருவவுடலுமொன்றுசசே
சாதியாவரெவரொன்னில்தன்னையறிந்துசிவமான
சாதிபெரியசாதியென்றுசாற்றுமறைகளசத்தியமே. ()

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் பெரியோாகளை சாதிபிரிந்து சொல்லு கிறதினாலே குற்றமுண்டோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

ஞானம்பதியா விழிகுலத்தோா நாட்டிற்பிரித்தே சாதிதன்னை, யீனசாதியாரெனவேறையிகழ்ந்தாாமுத்தாப த்தையும், ஆனபெரியோர்தங்களையுமவரிலொன்றாய்க குறித்துககொண், டனமுறைத்தேயருநரகிலிழிந்துபோ ஞரிகத்தோரே. (உஅ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) இப்பேர்ப்பட்ட பெரியோாகள ஜகத்தோரிக மூத்தக்கதாக திரிவானேன்? ஜகதத்தோரிகமுவானேன்? இத னல் யாருக்குத்துன்பம் யாருக்கு இன்பமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

பெரியோரைப்பிரிந்தவரென வுலகத்தோர்கள்
பேயரென்னவிகழ்வதெனைப்பிரிந்துக்கேளு
திரிவார்களிச்சைப்படி ஜகத்தோர்பார்த்து
தீவினையுமநல்வினையுந் திரட்டிக்கொள்வார்
சரியாசசென்றிருவினையுமொழித்துப்போட்டு
சச்சிதானந்தமெனும்பதத்திற்சார்ந்து
துரியாதீதப்பொருளைப்பெற்றுமந்தச்
சுயஞ்சோதியாகியேசுகமுற்றாரே. (உ௯)

[மனங்கேட்டதல்]

(அ-கை) ஆனால் பெரியோர்களிருவினையும் ஜகத்தோருக்கு ஒப்பித்து சுகம்பெற்றார்களே, அவர்களை யிகழ்ந்த வுலகத்தோரென்னலாபம் பெற்றார்களென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

பெரியோரையிகழ்ந்தவர்கள்பெற்றலாபம்
பேசக்கேள்நெஞ்சமேபெருமையாக
பரியேறிப்போனவனொருத்தீயில்வீழ்ந்து
பதைத்ததுபோலடியற்றில்நெருப்பைக்கூட்டி
கரிவாயில்பொருளப்பிசகுமிடம்போலே
நகைத்திகழ்ந்தேதிரிவாயினரகம்புக்கு
விரிவானவெழுநரகில்விழுந்திளைத்து
மெலிந்திடுவாரென்றுமறைநவீசுக்தானே. (௩0)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் பெரியோர்கள் மகத்துவ மிப்படியென் றமறியலானேன், அப்படிப்பட்ட மகாத்துமாக்கள் தெரிச னங்கண்டு கொள்ளுகிறதற்கு மார்க்கமுண்டோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

குற்றமேதுங்குறியாமல்குணமும்பலவாய்விரியாமல்
ஒத்துபொறிகளபுலனைந்துமுறவாய்நீயுமுரைந்திதனை
பத்துமபதனமாகத்தாண்பட்சமிகவுமனவைத்துரத்தாப்
சிந்தமுதனைச்சிவமாக்குஞ்சிவானந்தபோதமிதே. (௩க)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனாலவர்களிடத்திலும் சாத்திரத்தினைகேள் விகேட்டுத்தெரியும்படிச செய்துகொள்ளுகிறதுநானே, அவ ர்களாகிலனைகருட்பட்டு தொண்டுபண்ணவேண்டுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

ஐயமின்றியுடல்பொருளுமாவிமூன்று
மாண்டவனேயுன்னதெனறளித்துப்பின்னும்
துய்யகுருநாதனுக்கேயடிமையாகிச்
சொன்னபடிகேட்பதுமே தொண்டனாகி

மெய்யனென்றேயவர்மனமுங்களிக்குமட்டும்
வேண்டினதோர் சோதனைக்குமிதத்திடாமல்
செய்யதிருமலரடியிற்காத்திருந்தாற்
செவியதனிலுபதேசம்செய்வாராமே. (௬உ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால வெகு பிரயாசையா யிருக்கும் போலே இருக்கிறதே, சாத்திரங் கேளவிமாத்திரங்கேட்டு கொண்டு யுக்தியினாலே அனுபவித்து முத்தியடையக்கூடாதோ? குருசமுகத்தில் தொண்டுபட்டுதான முத்தியடையவேணுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

இருவினையுஞ்சமமுடை தகேயெழுந்துவந்த
வெண்ணகுருவாமாணிக்கவீசனாககும
குருவடிவாயமபலவருபதேசித்த
குறிபபைத்தானறியாயோகுருட்டுநெஞ்சே
மருவுமிந்தவுடலுக்குளுடலைக்காட்டி
வாக்குக்குவாக்கருளியனமுமோதது
திருவடியிலடையகுருமுகூர்த்தமலலாற்
சிவானந்தபோதகமுமதெளிந்திடாதே. (௬௬)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்படியானால ஞானாசாரியரிடத்தில் அனுக்கிரகம பெற்றுக்கொண்டால் போதாதோ? சாத்திரமும் பார்க்க வேண்டுமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

சேறுபோல்தளதளெனவலைபூமிக்குள்
திடமாகக்கம்பத்தைநாட்டினக்கால
மாறுகொண்டுவிழுந்திடுமென்றதறைசுற்றி
மணற்கல்லைக்கெட்டித்துமுறைக்குமாபோல்
கூறுகின்றசாத்திரத்தின்சாட்சிதந்து
குலைந்திடாதிடமுற்றுக்குறித்துநின்று
வீறுகொண்டுநெஞ்சேநீயனுபவித்தால்
மெய்ஞ்ஞானவீடதனில்விளங்குவாயே. (௧௪)

[மனங்கேட்டதல்]

(அ-கை) ஆனால் சாத்திரம் தெரியாதபேர்கள் சற்குருவினிடமுபதேசம்பெற்று சாதித்து அனுபவமடைந்தபோதகள் பெற்றகாட்சி நூலிலுள்ளபொருளுக்கு ஒத்துக்கொள்ளுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

உறுதிகொண்டபிள்ளையென்றுலாசான்வைத்த
வுபதேசங்கேட்டளவிலுறுதிகொண்டே
இருதயத்திலநாட்டினதுநழுவிடாம
லெப்போதுமகுருபத்திதவறிடாமல்
மறுகவலைசாராமலூனறப்பெற்றால்
வழங்குநூலபேசுகின்றவண்மைக்கொக்கும்
கிருபைதருமமுத்திபெயடையலாகும்
கிட்டினவர்க்கேதுகுறைகேடிலநெஞ்சே. (௧௫)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் ஞானானுபோகம் ஒருவர்பெற்றிருந்தால் பெறாதவர்கள் அந்த அனுபோகத்தைச் சொல்லவென்றும் காட்டவென்றும் சொன்னாலவர்களுக்கு ஒத்துக்கொள்ளும்படி சொல்லலாமோ? அப்படி இப்படியென்றுங்காட்டலாமோ? ஆகிலும் மெய்ப்பொருளினிட பிரகாசத்தைப் பேசினால மனமொத்து களிப்பார்களோவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

ஒருவர்தினவொருவர்சொரிந்தற்றபோது
வுற்றவர்களோசொரிந்தவர்களோவுற்றுப்பாரு
மருவுமந்தசொப்பனத்திறங்கண்டகாட்சி
மகிழ்ந்தவர்களோகேட்டவர்க்கோமதித்துப்பாரு
உருசியுடனறுசுவைகொண்டுண்டவர்க்கோ
உண்மையுடன்கண்டவர்களோவுணறிப்பாரு
தெரிசனமுங்கண்களைகண்டுசிந்தையுற்ற
சிவஞானமவரவர்க்கேதெளியுந்தானே (௩௬)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் மெய்ப்பொருளினுடைய பிரகாசம்அவரவர்கள் கண்டெளிக்கப்பட்டதுதானோ வென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

நீதானேயறிந்தல்லோநிலைக்கவேண்டும்
நீட்டோரோசொல்லுகின்றநெறியிற்சென்றாற்
போதாதுபோதாதுபொந்துக்குள்ளே
புலியிருக்குமென்றதனைப்புகுந்துபார்த்தால்

வேதாளமென்றதொருமயக்கந்தீரும்
மெய்யடியார்மனங்களிக்கமேவிவாழ்வாய்
வாதாடிமுத்தர்களைவிட்டிடாதே
மனமேநீயுள்ளபடிவணங்குவாயே. (௩௭)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனாற் றனித்தனியே சுகமடைவதாயிருக்க, பெரியோர்களொருவர்க்கொருவர் கூடிக்கொண்டானந்தமிகுந்துறவாடுகின்றார்களே அஃதெவ்வித காரணம்பற்றியென மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

மறைப்பானமூன்றுமொழிந்தமுத்தர்
மனவெளியாம்பெருவெளியின்மருவலாலே
துறப்பானவாகாசமொன்றாகத்தனிற்
சூரியன்றன்பிரகாசந்தோற்றம்போல
சிறப்பாகத்தேகத்திலிருக்குமுத்தர்
திருஷ்டியினாற்கலந்தொன்றாய்த்தியானிப்பார்கள்
மறைப்பானதில்லைநெருஞ்சகண்மணிக்குள்
வன்னியொளிமருவுமந்தவண்மைபாரே. (௩௮)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனாற் சாத்திரங்களிலே சரியை, கிரியை, யோக, ஞானமென்று சாற்றுகின்றதேயவற்றுள் முன்சொல்லிய முத்தொழிலுஞ் செய்து முடிந்த பின்னரன்றோ ஞானமறிய வேண்டியது. அப்போதன்றோ ஞானாசாரியர் கிருபாகடாக்ஷம் வேண்டியதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சரியைமுதன்முத்தொழிலுஞ்செய்கின்றோர்கள்
சாயுச்சியமுத்திரையைப்பணியவேண்டுமே
உருசியுடனமுதளித்துபபாதபூசை
யுண்மையுடனுபசாரஞ்செய்யவேண்டும்
பரிசைகொண்டுசோதித்துநிந்தைசொல்லி
பகைத்துவிடினைகைதடுவார்பலனோபாழாம
விரிவுகொண்டுமெய்க்காதேயுற்றுப்பாரு
வீணருடனகேளாவிட்டுமெய்யைப்பாரே. (௩௯)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆனாலவ்வளவு மதந்துவமிருக்கிற படியினாலே யமமுதறொழிலினது லாபமுஞ் சுனுவிலே யிவராலே முடித்துக்கொள்ள லாகாதோ வென மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சாயுச்சியமுத்திரையையடுத்துக்காத்துச்
சங்கையறுத்திருவுளத்துப்பாகக்குக்கொத்தால்
நீயுசசியமாகவெனமுகிருமைபநோக்கில
நேரானமுத்தொழிலினிலாபநோக்கு
மாயுச்சியமாகவேயம்பலத்தான்
மலரடிக்கேயன்பாகச்செல்வாய்நெஞ்சே
பாயுச்சியமாகவேபெற்றோருணடு
பராபரத்தையடைந்தி[illegible]தாமே. (௪௦)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனா லித்தகையவனுபவத்தை, யில்லறத்தினின்று பெற்றுள்ளாரெவரேனுமுண்டோகொல்லோ, அன்றேல், துறவறம்பூண்டு, சந்நியாசியாய பற்பல விரத வைராக்கியமும் சாவசங்க நிவிர்த்தியுஞ்செய்து, ஜெகசஞ்சாரத்தை விட்டகன்று, ஆரணியசஞ்சார முற்று வருபவர்களின் ஞானமென்னு மறிவு பிரகாசமாகி ஸ்பஷ்டப்பட்டுளரோ வென்றும், இவர்களிலுந் தம்மனதுட் குடிகொண்ட வஞ்ஞானாந்த காரத்தை யோட்டும் வன்மையிலராகி மூடராதலுமுண்டோவென்றும் மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சந்நியாசியானதிலு மூடருண்டு
சமுசாரஞ்செய்வதிலு ஞானியுண்டு
முன்னும்மெய்யதுவாம்பிராரத்துவங்கள்
மூட்டிவிட்டு ஞானிகளுமறைதப்பாது
பின்னும்மேற்பிறவினையுந்தொடரச்செய்து
பெற்றிடுவாராசானறன்கிருபைகொண்டு
பின்னுபின்னங்களெல்லாமறைந்தே
பெருஞ்சோதிமுத்திநிலையைப்பெறலிக்கூடே. ()

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனால இல்லறத்திலேயிருந்தும் ஞானம் பெற்றுக்கொள்ளலாமென்கிறது சுருக்கமாயிருக்கிறதே, உலகத்திலுள்ள பலரும் ஞானாசிரியரிடத்தனுக்கிரகம் பெற்றுக்கொண்டு முத்தியையடைவ தருமையாயிருக்கிறதே, அதிலென்னபிரயாசையென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

யாவர்களுமபெரியோரையடுததுக்காத்து
அவரடிககேபணிந்துமிகவளபுசெய்து
ஆவலுடனபனனிரணடுவருடங்காதது
மபபோதுபககுவத்தையறசசோதிததுத்
தேவர்முதனமூவர்களுநதேடிக்காணுத்
திருவடியுமுடிநடுவுநதெரிசிக்கததா
லுவதனலுபதேசஞ்செய்வாரெஞ்சே
நல்லறிவாலவெகுபூசைநவினறதாமே. (சஉ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனல புணணிய மிகுந்து சிவாசாரபகதி, நேயம, சிவாரசனை, வெகுகாலஞ்செய்து பினனே நலலறிவுபிரகாசிததிருக்கும் போகளுககுப பெரியோாகள் தெரிசனஙகிட்டும் அப்போபபட்டவன் ஆசான்திருவுளததுப் பாங்குக் கொததுநடாது பரகதியடைவானென்று சொனனது மறியலானேன். ஆகிலுமபெரியோாகளை யடுத்து, அவாதிருவுளததுக்குப் பாஙகுபோலநடநது, தீகைஷயும் பெறறுககொணடு, சாத்திரத்திலுளள பூட்டை அனுபோகத்துக்கும் ஒபபும்படி தெரியவுங கேள்விபபட்டுக்கொணடு, ஆசாரியரைக்கவனியாமல், மதங்கொண்டு, ஆசாரியாா திருவடிசூட்ட மகிழ்ச்சியிலலாமலும், பூரண தீகைஷயாகாமலும், தட்டிபபோகிற துண்டோவெனறுமனங்கேட்க அறிவு கூறிகினறது.

[அறிவுகூறுதல்.]

அடியருக்குத்தொணடாவதருமைகெஞ்சே
யவரவர்ககுவிட்டகுறையடுந்தகாலம்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய

பிடியாமலிருப்பாரோதொட்டுக்கொள்வார்
பேதமைகளாலுலகம்பிணைகருவந்து
குடியாகுமதனாலேநழுகிப்போவார்
குற்றமறச்சற்குருவைக்குறிக்கச்சொல்லும்
விடியாதகாலத்திலிருளேயாகும்
விடிந்தபின்புகலனுக்குவெளிச்சமாமே (௪௩)

[மனங்கேட்டல்]

(அ-கை) நீர் உலகவிபரீதம் வருகிறதாகவும், அகனமே ஆசானைவிட்டு நழுவும்போது ஆசானைக் குற்றமாகக்குறித்துக் கொண்டு போகிறதாகவுஞ்சொன்னீர், அறியலானேன். ஆகிலுமிவ்வளவிலே நழுகினாலும், இனியொரு தேகம்புண்ணியமிகுந்த மானிடமாயெடுத்து, சடுதியிலேவிட்டகுறை முடியும்படி ஞானசாத்திரியார் கிருபையடைந்து, முத்தியடைவார்களோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

இவ்வளவுந்தொட்டேகும்போதுமீண்டும்
இகபோகவிபரீதம்வந்தாலுந்தான்
அவ்வளவுந்தான்குருவின்றிருவுளத்துக்
கன்புதவருமலேயகன்றானாகிற்
றெவ்வளவாய்விட்டகுறைதாக்குஞ்சேர்க்குந்
தேசிகனைக்குற்றமெனிற்றெளிந்துமேலாம்
நவ்வளவாயிழிந்துவிடும்பின்னுமந்த
ஞானகுருத்துரோகமுற்றுநரகஞ்சேர்வார். (௪௪)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் ஞானசாரியாரிடத்தி லொத்தாப்போலி ருந்துதெரிந்துகொண்டு, ஞானகுருத்துரோகி தானேதான்றெ ரிந்தவன்போலே பேசுகிறானே, உலகத்தாரகளும் சிறிதுபே ரகள் அதைக்கேட்டுமயங்கி ஒத்து வணங்குகிறார்களே அவர்க ளுக்கு மிவர்களுக்கு மென்ன லாபங்கிடைக்குமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

புலித்தோலைப்பசுவரித்துப்போர்த்துக்கொண்டு
புலியென்றாற்புலியாமோவினாறுங்கேளு
பலிப்பாகப்பெண்போலேபுருடனைவேடம்
பகட்டினாலவனுருவம்பாவையாமோ
சலிப்பானநரகத்தில்வீழுமாண்டார்
சற்குருவின்றனையிடத்திற்கற்றுக்கொண்டு
நலிப்பாகப்புலிப்பாயுமியல்புபோலே
நானிலத்தோர்வணங்கினதாலீனமாச்சே. (௨௫)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனாலவன் றானுங் குருத்துரோகியானபடியினா லே எவ்வளவுதெளிவாய் பேசினாலும் முத்திவிலக்க னென்ப துசரியே. அவன் நிச்சயவானென்று நேசிக்கிறவர்கட்கு மெ னவிலாபமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

மரப்பசுவின்முலையதனிற்பாலுண்டாமோ
மலடிக்குச்சுதனுடையமகிழ்ச்சியுண்டோ
தூரத்தறியாததண்ணீர்ப்பாம்புதன்றலையிற்
றுலங்குமணியிரத்தினமுந்தோன்றுமோசொல்

பரதத்தினிடத்திலேயதனைக்குருமுன்பாகப்
பதியாதமூடனையேபணிந்ததாலே
வியாதத்தமேயல்லாமலுதவிசெய்ய
விஞ்ஞானமுண்டாமோ விளங்குநெஞ்சே. (௩௬)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆணலறியலானவை,ஸ்ரீகட்கு ஞானம்வாராதென்று
ம,புருடாகருமாந்திரம் ஞானமுண்டெனவெதனாலே? அஃதுவி
ளங்குமாறு சொல்கவென்று மனங்கேட்கஅறிவு கூறுகின்றது

[அறிவுகூறுதல்.]

அஞ்சுகின்றபெண்ணென்றுமாணென்றுந்தா
னஞ்சுபஞ்சபூதத்திற்பிரிந்ததுண்டோ
நெஞ்சிலுள்ளவஞ்சகங்கள் வேறுமுண்டோ
நிறமவேமேறுகுணமவேறுநேசமவேறு
மிஞ்சுகின்றவுயிர்தானும் பெண்ணெனறுண்டோ
மெய்கண்டநூலதிலேபிரிக்கதுண்டோ
சஞ்சலத்தாற்சொற்கேடுமயங்கிடாதே
சங்கையறமுன்னூலைச்சாருந்துபாரே. (௩௭)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆணல் பேதைமையெனபது மாதர்கணிகலமெ
ன்றும் ஔவையார் கூறியதென்கொலென்றறிவுவினவ மனங்
கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

ஆணுக்கும்பெண்ணுக்குமறிவொன்றேயாம்
ஆணலும்பேதைகுணமபெண்ணுக்குண்டு
வீணுக்கேயெபித்தசென்மமனந்தகோடி
விவேகமுத்தியடைந்தவர்களதிலுமுண்டே.

ஊனுக்குத்தேடியுண்டேயுறங்கிச்செத்த
வுலுததருண்டுபுருஷரிலேயனந்தங்கோடி
தானுவினுக்கேகசராசரந்தாநெஞ்சே
சற்குருவுக்கப்படியேசார்ந்துபாரே. (௪௨)

[மனங்கேட்குதல்.]

(அ.கை) ஆனலதுவு மறிபலானேன் நான் கேட்கப்பட்டசங்கைகளுக்குச் சரியெனனும்படி சமாதானங்கொடுத்து நன்குக வருமையாப் தெளிவுடனேயா சொலலப்போகிறீர்கள! இனிமேல நடக்கவேணடிய தெனனவென்று குதூகலங்கொணடுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

இன்னமின்னமபிறவிதனிற்பிறந் தனன்றே
வினிமேலுமபிறவாமலிருக்கைநன்றே
வனனுகினறநினேவேது கருதுதகேட்டா
வோதுகின்றவாக்கேது செவிதானேது
பனனுகின்றகலையேதுபண்தானெங்கே
பாடுகின்றசத்தந்தானதொனிததெங்கே
முன்னிலையாய்ஞானகுருமொழிநதேது
முத்திநெறியாய்மனமேமுனைநதுபாரே. (௪௩)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆனலெவ்விதத்திலேயும் பாரக்குமளவில், இக்குடும்பச்சேற்றில உழைத்துக்கொள்ளுகிறதும், அதற்கொத்தாசையா யுலகத்தார்சொல்லை விசுவாசமாய் ஒத்துக்கொள்ளு

கிறதும், துக்கமேயொழிய வுள்ளபடி குடும்பத்தார் என்மேல் பிரியமாயிருக்கிறதேயில்லை. எப்படியெனில்—நான் சிலநாள் சம்பாதனையில்லாமலும், தேகசௌக்கியமில்லாமலும், ரோகஸ்தனாகவிருக்கும்போது சர்வதிரபேர்களும என்மேல் மனதுசலிப்புற்றிருந்ததுகண்டேன், ஏவல்பணிவிடையில் வெறுப்பானதுகண்டேன், சாலவும் பிரக்ஞைதப்பியிருக்கும்போது பெண்டுபிள்ளைகளை எதிர்விட்டா ஆஸ்தியைக் கேட்கச்சொன்னதுங்கண்டேன், அவரவர்களழும்போது ஒப்பனைசொல்லி அழுகிறவயணமுங்கண்டேன், யெல்லாப பொருளையிச்சித்திருப்பதென்று மறியலானேன், எனக்கு உரிமையானபோ ஒருவனையுங்காணேன், அல்லது சிலது நாளுழைத்துமக்கண்முதலாகியபோ சமயாதிககசாமாத்தியம் வருந்தனிலும் உழைத்துப்போட்டு அதன்பின சும்மாயிருப்போமென்றாலும் என்னிச்சைப்படிநடக்கவும்மாட்டாது, அதுவுமறியலானேன். ஆகையால் சத்துருவாகிய இந்தப் பேய்க் கூட்டங்களைவிட்டு காயந்தளராமுன் சிவன்றிருவடியடைதற்குநீசொன்னபடி சத்தியமாயநடப்பேனென்று மனஞ்சொல்ல அறிவுகூறுகின்றது.

பணியறுத்தல் முற்றிற்று.

[அறிவுகூறுதல்.]

வேறு.

பொன்னினெஞ்சமேசொற்படி கேட்கவும்பொரு
ந்தியேகன்றாக, இன்னமின்னமும் பேதைமைகொள்ளவை
யோவில்லறந்தனைவிட்டு, தன்னைத்தானறியாமலுஞ்சில

னடிசார்வதுமிழந்தாக்கால், பின்னமபின்னமாயிரண்டு ங்கெட்டா னென்றேபேதைமைகொள்வாயோ. (௩௦)

[மனங்கேட்டதல்.]

(அ-கை.) இதனால் நான்தெளிந்தவிதத்திலே பேதைமை யென்பதிருக்குமிடமுங்காணேன், சர்வபணியு மறந்துவிட் டேன. ஆனால்தெளிவாய்க் கேட்பதற்குத் தெரியும்படிசெய்யு முதவிவேணடுமென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சுத்தநெஞ்சமே சற்குருமலரடி தொழுவகைகேட் பாயேல, பத்தனுகியேமாணுபிமானமும்பற்றறவிட்டே நீ, குற்றமேதுமற்றெவ்விடங்காணகினுங்கூறுடற் களி ப்புற்று, பற்றுமாகியேதிருவடிகெதியெனப் பண்புடன் பணிவாயே. (௩௧)

[மனங்கேட்டதல்.]

(அ-கை.) ஆனல் மாணபிமானமவிட்டு, குருவை யெவ்வி டங்காண்கினு மனோவாக்குக்காயம் ஒத்து, அன்புகளிகூர்ந்து எண்சாண்தேகத்தை இருகையாக்கி, நனமலரால் அவர்திருவ டிக்குச்சாத்தி, தீர்க்கதெண்டம்பண்ணச்சொன்னீர், அதற்குச் சந்தேகமில்லை. இவ்வளவுமிழந்து நான் இதற்கஞ்சவேனே. அப்படியே செய்வேன். ஆனால் அதிகமாக உலகத்தார் இகழத் தக்கதாக குரு மிகுந்த அசங்கியரூபமாக விருந்தால் நான பணியுமளவிலேநிந்திப்பார்களே! அல்லது அவ்வாறிருக்கினும் அப்படிதான்செய்தல் முறைமையோவென்று மனங்கேட்க அறி வு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

சூவலையத்தோர்சொல்கின்றகேள்வியாலே
கூசுகின்றநெஞ்சகமேகூறக்கேளு
ஆவலெனுங்கடலுக்குளாழுமாண்பர்
அபிமானம்வந்தன்னை அண்டிற்றானால்
சவலையாய்நழுகிடுவாய்முத்திமார்க்கந்
தான்கிடைப்பதருமையதைச்சார்ந்தேநீதான்
சிவனடியையடைவதற்குசற்குருத்தன்
றிருவுளத்துக்கொத்தவழிசெலலுவாயே. (௫௨)

[மனங்கேட்குதல்]

(அ-கை.) ஆனால்சற்குருவின்றிருவடியில் சரணஞ்செயவ தற்குமார்க்கமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின றது.

[அறிவுகூறுதல்.]

ஓம்நமசிவாயவென்றவக்ஷரத்தை
உச்சிக்கண்புருவமவாய்மூக்குநாசி
தாமசங்களில்லாமல்முக்காலுந்தான்
சற்குருவின்றிருவடியில்தானமுத்தி
நேமமாயிப்படியுஞ்செய்வதுந்தான்
நேரானசரணத்தின்றீக்ஷையாகும்
ஆம்பின்னையென்றெண்ணியிருந்திடாதே
ஐயனுள்ளங்களித்திடவேயாசைவைப்பாய். (௫௩)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் சரணதீக்ஷையுமறிந்தேன், செய்யவுந் துணிந்தேன், கருத்தில் செய்யும்படி குறித்தால் போதாதோ காயத்தினாலு மிகுதியாய் வணங்கிக் கொள்ளவேணுமோவென் றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

காயமனவாக்கினாலடைந்தகன்மங்
    காயமனவாக்கினாற்கடக்கவேணும்
காயமனவாக்கினாலொன்றொழிந்தால்
    கடமெடுக்கவேதுவாங்கண்டபோரு
நேயமுளவைம்புலனாற்சூழ்ந்த துன்பம்
    நீக்குதற்குமுறையிதுதானிலைதப்பார்நீ
மாயவித்தையாமென்றுநழுகிடாதே
    வருஞ்சகத்தைநீவிட்டுவணங்குவாயே. (௫௪)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆனாலப்படியேசெய்கிறேன், இன்னஞ் சற்குருதிருவுளத்துக்குப் பாங்காய் நடக்குமார்க்கங்கள் சொல்கவென் றுமனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வஞ்சனைபொய்சூதுகபடங்கணீக்கி
    மானவபிமானமுதற்பெருமைநீக்கி
யருகுகின்றகோபமாங்காரநீக்கி
    ஆசைபாசத்தப்பாதியடியோடேநீக்கி

துஞ்சவேசோதித்துப்பார்த்தாலுந்தான்
துணிவாகித்திருவடியேகெதியென்றெண்ணி
தஞ்சமென்றேயையனதுகிழல்போற்காத்து
சரணத்தினேவல்செய்துதழைத்திடாயே. (௫௮)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) அப்படியே தொண்டுசெய்கிறதற்கு மாளானேன், எத்தொழிலுமில்லாமல்சர்வ ஆசையுமிழந்து கிரந்தரமாயிருக்கிறபெரியோர்களிடத்தில் தொண்டுபட்டிருந்தால், வயிற்றுப்பசிக்கு அன்னம்வேண்டியிருக்குமே யதற்கென்னவயனமென்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

இச்சையுடனெத்தனைநாளிவ்வுலகில் வாழ்ந்தாலுமிடரேசொல்வார், நச்சைவருமிதனாலேதெளிவுற்ற மனதென்றுநலலோர்சொலலா, சச்சடியையிட்டுவிடுமுப்பொருளையோர்பொருளாய்ததனிததுபபாரு, பிச்சையென்னவிசாரமென்னதலைமேலேசுமந்துவரப் பெருமாலுண்டே. (௫௯)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) அப்படியிருக்கச் சிவசொரூபத்தைப்பெற்றிருக்கின்றபோகள் ஆகாரததுக்காகப் பலவிதங்களான தொழில செய்கிறதும், சிததுகள் விதனைகள் செய்கிறதும், பொய்சொல்லுகிறதும், சிவசின்னவேடத்தைக் கபடாகத் தரித்துக்கொள்ளுகிறதும் என்ன? வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

ஆணை முதலெறும்புகடைக் கமுதளித்துக் காக்கு மொருவரனேயல்லால், சேனைவிதமாகவிந்த மானிடர்கள்செய்வதெல்லாஞ்செகத்தின்மாயை, ஊனைமுதல்சுமந்தவரார் உண்டபின்பு களித்தவரார் உற்றுப்பார்க்கில் தேனையுணடிருசி கண்டதிருடனைத்தான்கண்டவர்க்குத் தெரியுந்தானே. (௫௭)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆறு லறியலானேன், பெரியோர்களிடத்தில் பக்திவைராக்கியத்துடனே கிஞ்சிநேரமாகிலும் பிரியாமல் சரணடைந் தேவலுஞ்செய்துகொண்டிருக்கிறவர்களுக்கு எந்தபதவிகிட்டுமே? என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

ஆசான்கிருபைமிகுந்ததனாலந்தவுடற்போய் மறுவுடலில, கூசாதிருந்துந் தன்னணடை குறைவொன்றில்லாநிறைவாக, தேசாநேசர்சூழ்ந்திருக்கத் திருவோலக்கஞ்சேவிக்க, ஈசாவென்றேமனமறபோற்றவெய்தும்பரமபதம்நெஞ்சே. (௫௮)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆனால் நிழறபோற்பிரியாமற் சரணத்தேவலுஞ் சலியாமலும் செய்கிறேன். ஐயோ? வெத்தனைபிறவியோ எடுத்துவந்துகொண்டிருக்கிறநான் இன்னுமோர்பிறவிபிறப்பேனோ.

முழுதும்பிறவாமலிருக்கிற மார்க்கமுண்டோ? அதைச்சொல்லவென்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

உடல்பொருளுமாவியுஞ்சற்குருநாதற்கே
வுண்மையுடனுதகத்தால்தாரைவார்த்து
நடமாடுமிமமூன்றுமெனதெனவென்னு
நாயகனுஞ்சீவனேயேயடிமையாக்கு
திடவாகருதகவறுமல்நிலேததுநெஞ்சே
தேகந்தாவெனுழியளவுமுதவிசெய்தால்
படமாடுமரவத்தையணிந்தவீசன்
பதம்பெறுவாயுள்ளபடிபகர்ந்திட்டேனே. (௫௧)

[மனங்கேட்குதல்.]

(அ-சை) ஆனால் நலம் தாயிற்று, இதுவரைகரும் நானே உடல், பொருள், ஆவிமூன்றுக்குமுடையவனென்று நீர் சொன்னபடிகேட்டு சருவசங்கையுமிழந்து நிருவிகாரியாய் என்ன கெதியென்றுகேட்குமளவிலே சீவனுண்டென்றும் சீவனுக்கு உடல்பொருளாவி தொந்தமென்றும் அதைக் குருவுக்குத் தத்தஞ்செய்து சீவனே அடிமையாக்கி ஆசான்சொறபடி நடந்து சிவேசனுகிறதாய்ச்சொன்னீர், மகாசந்தோஷமாயிற்று! அப்படியே சீவன்முத்தி யடைகிறதானல் நானித்தனைப் பிரயாசப்படவேண்டியதென்ன நான்-நீயார் இவ்வளவுநான் சந்தேகமற்றுத் தெளிவுகொண்ட லாப மென்னவாகப்போகிறதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சிவனேநீயாகுமறிவுநீயாஞ்
சிவன்றானேநீயாகும்பரமுநீயாம்
நாவுகின்றசெயலுடனேமனதெனறுன்னை
சாற்றியதோராநாமமாஞ்சாவசங்கை
மேவவேமொழிகிறதுமுனதால்நெஞ்சே
மெலலமெல்லச்சொற்படியேமேவினக்கால்
நாவுதனிற்பிரிகின்றபேதமற்று
நாம்சிவமாய்வாழலாம்நாடிப்பாரே. (௬0)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆறு லறியலானேன், இனி உடல்பொருளாவி மூன்றும குருவுக்குத் தத்தம்பண்ணச்சொன்னீர். இந்தமூன றையுந் தெரியபபடுத்துமென்று மனங்கேட்க அறிவுகூறுகின றது.

[அறிவுகூறுதல்]

உடலென்றுறசடாதாரவுடலேயாகும்
உயிரானபிராணனேபாவியாகும
திடமாகவிரண்டையுந்தானெனதென்றுற்ற
சீவனேசிறநமபலபபொருளதாகும
அடவாகவிமமூன்றுங்கொடுத்துத்தன்னை
அடிமையெனசசத்தியமாயிருந்தால்நெஞ்சே
இடமானகதிபெறவேயுபதேசிப்பார்
இப்படியேகுருபததிலிஷ்டமவையே. (௬௧)

[மனங்கேட்டுதல்.]

(அ-கை) அப்படியே செய்யலுற்றேன், இனி தீக்ஷை யென்பதும, நூலென்பதும், குரு சொலலென்பதும், சாதக மென்பதும், முத்திவீடு என்பதும், தெரியச் சொல்கவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

தீக்ஷையது நூலாகும நூலவிளக்காம்
திறமானசற்குருசொல்லுபாயமாகும்
தாககுகினறசாதகந்தானேணியாகும
சபையென்றவெளிதானேவீடதாகும்
மார்க்கமென்றதிதுநெஞ்சேமுன்னோர்கூட
வாழ்ந்தவருமிபபடியேமருவிப்பாரு
நோக்கையிலேயிதிலொன்றுநழுவிற்றானால்
நொந்துநொந்து பிறவியினிலுழைக்கும்பாரே. ()

[மனங்கேட்டுதல்.]

(அ-கை) எல்லாம் உள்ளபடி யென்றறிந்துகொண்டே ன, இனிமேல் சற்குருவினுடைய திருவுளமகிழ்ந்து நான் க டைத்தேறும் பொருட்டாய் உபதேசஞ் செய்யும்படி சொல்க வென்று மனமகேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

அப்படியேசெய்விப்போமழகுநெஞ்சே
யாசானதன்றிருவடிக்கேயனபதாக
வெப்படியாகிலுமுன்னேமாமையகிட்டி
யிதமபோலாமஜெனனமதற்கிடங்கொடாதே

செப்படிபோல்வந்ததொருஜெனனநீங்கி
சிவானந்தபோதகமாய்த்தெளிவாய்நீயும்
மைப்படியுங்கண்ணிபங்கன்குருவாய்வந்து
வாதனையைத்தீர்த்திடுவோர்வணங்குவாயே. (சுக)

[போதுகவனிப்பு.]

(அ-கை) இதுவரையிலுஞ் சிவனைப்பின்னிட்டு, மனதை முன்னிட்டு, சற்குருவை பினனிட்டு, அறிவு முன்னிட்டுககொண்டு மனத்தினுடைய பணியறுத்து சற்குருகடாக்ஷம் பெற்றுககொளளும் வகை கூறினது; இனி மனதைப் பினனிட்டு ஜீவனை முன்னிட்டு ஜீவனுக்குள் மனமொடுங்கி முததியடையததக்கதாக அறிவைப் பின்னிட்டு சற்குருவைமுன்னிட்டு அறிவைச் சீவனுககுப்போதித்து நீ நானெனறு இரணடில்லாத பரிபூரணமாய் ஆக்கும்பொருட்டு ஜீவனுக்குக் குரு சிவானந்த போதிக்கு மார்க்கம் கூறுகின்றது.

[ஜீவன் சொல்லுதல்]

ஆதியேயந்தமேயருமையான
வருட்கடலேயையனேயகண்டமுற்ற
சோதியேசொரூபமேசுகததைக்காட்டும்
சுத்தனேசித்தனேசுயமபிற்பொங்கும
பாதியேபரமனேபாரிணமீதே
பரமபோகச்சுந்தரமாயெழுந்துவந்த
நீதியேயென்னுடையபிறவிநீக்கும
நிச்சயமேதிருவடிக்குச்சரணமேற்றனே. (சுஉ)

[குரு சொல்லுதல்.]

தீக்ஷைமுறையாகவேசரணஞ்செய்த
செல்வனேஞானமென்றதீரமபெற்று
பாக்கியமாய்மெய்ப்பொருளைக்கொள்ளவேண்டிப்
பாரினிலேவெகுபேர்கள்பதைத்துவந்தார்
பாக்கியத்தாற்சிதறினார்சிலதுபேர்கள்
பாழ்மனத்தாற்சிதறினார்சிலதுபேர்கள்
தாக்கியதோராசாதகத்திலதாளாமற்றான்
தவறுண்டேபோயினாசங்கையுற்றே. (௬௫)

சங்கையதுவிட்டாற்போறனெண்டுபட்டு
சாத்திரத்தின்பூட்டுகளைத்தெரிந்துகொண்டு
மங்களமாய்தீக்ஷைதனைப்பெற்றுநன்றாய்
வையகத்தின்சுழலினிலேமயங்கிச்சென்று
பங்கமாயபிமானத்தொழிலேசெய்து
பதுங்கினார்குருமுகத்துக்காகாமற்றன
திங்களணிசடையாதன்பாதஞ்சேர
தீவினையில்மெலிந்திட்டார்சிலதுபேர்கள். (௬௬)

அப்படியேயகீநழுகித்தடத்தைவிட்டே
யமபலத்திற்சிக்காமற்காலன்பாசந்
தப்பவகையறியாமற்பிறவிதன்னிற்
சாருவையோகிலேகொண்டுசாதிப்பாயோ
ஒப்பவேயுடற்பொருளுமாவிமூன்று
முலகத்தால்தாரைவிட்டுவனைநானென்று

செப்பவுந்தானுவிழந்தேயடிமையாகிச
சிந்தையற்றுசசிவமாகிவாழ்கநீயே. (௬௭)

[ஜீவன் சொல்லுதல்.]

பாக்கியங்கள்பெறவேண்டி குருவடிக்கு
பதறியேவந்தொருபாரிலுள்ளோர்
வாக்கினுல்மனத்தாலுஞ்சாதகத்தின்
வருத்தத்தாற்சிதறினபேராராரையா
நோக்கினதிற்றவரும்மற்பிடிததுமுத்தி
நுண்ணறிவாற்பூரணத்தையடைந்ததாரோ
தாக்கியதோர்மைந்தர்களையறியச்சொல்லும்
தயாபரனேகுருமூர்த்திசொல்வாய்நாதா. (௬௮)

[குரு சொல்லுதல்.]

எத்தனையோமைந்தர்களைப்பெற்றேனப்பா
வெடுத்துரைப்பேனமதலையியின்பமாக
பத்திவைராக்கியமுநழுகிடாமல்
பாரிலுளளோர்தங்களுக்குச்சொந்தமாக
முத்திபெறுமனக்கணுமபிரகாசித்து
மூதறிவால்தத்துவததைமுழுதுமாள
சத்துசித்தானந்தமுமாய்ப்பூரணத்தைச்
சார்ந்திட்டான்குழந்தையென்றதங்கந்தாமே. ()

ஆமென்றேவந்தவர்களின்னமுண்டு
அவரவர்க்குத்தீக்ஷைவைத்தோமன்பதாக

ஓமென்றமுக்திநெறிக்கொவ்வுவாரோ
ஓதுங்கியேபதுங்கியேயோடுவாரோ
நாமென்றவகங்கொண்டொழுகிப்போறார்
நாதனையேயதுாஷித்துநலம்பெறாமல்
போமொன்றேதள்ளவில்லையவர்கள்தானே
பொல்லாங்கைக்குறித்தல்லோபோய்விட்டாரே.
நிலைகககவென்றுவந்தவரிவதவரிப்போன
நெஞ்சகனைச்சொல்லக்கேள்நினைவாய்நீயு
மூலைகருதிகைகைப்பிடித்துப்பாலுண்ணுமல்
மூடத்தால்நானென்றமகத்தையுற்று
கலைகாந்திநில்லாமற்சாதிக்காமல்
கற்றபொருள்போதுமென்றேபெருமைகொண்டு
கொலைகளவாம்வஞ்சகத்தைவிடாமற்றனே
குலைந்திட்டான்வைத்தியலிங்கன்குருநான்றனே.

[ஜீவன் சொல்லுதல்.]

அப்பனேமைந்தர்கள் தன்றிறத்தைக்கேட்டு
அறிந்திட்டேன்முத்திபெறவேறார்க்கடியேன்றனே
செப்பமாஞ்சரணங்களகோடிசெய்தேன்
சிதறினவர்பால்மனமுஞ்சொலலவொட்டேன்
கொபமபனவேயெனையாளவிங்குவந்த
கொற்றவனேயுனைப்போலத்துலக்கங்காணேன்
இப்பவேயடிமைகொண்டுகாக்கவேண்டி
இரங்கியேயருளபுரிவாயெந்தன்கோவே. (எஉ)

அறிவாளனாகியேபணிவுறுத்து
அச்சங்களெல்லாந்தானறுத்துப்போட்டு
குறியாளனாகவேதுணிந்துவந்த
கொடுமைபாவியெனையாளக்கூச்சமென்றோ
தறியாளனாகினைவுலகத்தேதான்
சங்கையதுவந்தாலுந்தாளமாட்டேன்
முறியாளவந்தகுருநாதாவுந்தன்
முகிழ்மலர்த்தாளகெதியென்றுமுனைந்திட்டேனே.

[குரு சொல்லுதல்.]

நிலமதனைசலதநிறைற்சுத்திசெய்து
நிராமயமாங்கணபதியைகாட்டிவைத்து
பலமுடையசோதிமலர்சாத்திமிக்கப்
பரிவானபுகைதூபங்காட்டிபபின்னுந்
தலமுடையவெளியதனைநிவேதனஞ்செய்
சரணஞ்செய்யெனமகனேயுபதேசிப்போம
பிலமுடனேயிடம்வலமாய்ச்சுற்றிவந்து
பெருவிரலைப்பற்றிக்கொள்பேரின்பத்தே. (எச)

அன்புடனேயுடல்பொருளுமாவிமூன்றும்
அறுதியாயளித்துவிட்டுநீதானையா
தெனபுடனேயடிமையெனச்சத்தியஞ்செய்
சிதறுமல்நில்லப்பாநிகைக்கூவைப்போம்
மின்புக்தன்செவிதானேயோனியாக
பேசுமெசதனுவுதானிலிங்கமாக்கு

இன்பமுடனனுபோகத்திருக்கவென்றே
இருசெவியிலுபதேசமேற்றுவோமே. (எரு)

[ஜீவன் சொல்லுதல்.]

அப்படியேபஞ்சசுத்திபூசைசெய்தேன்
அழகாகச்சரணங்களபிரகாரஞ்செய்தேன்
செப்பினோர்பெருவிரலைப்பறறிகொண்டேன்
தேகமுடன்பொருளாவிசத்தந்தேனை
ஒப்பதுவாயானுமேயடிமைபானேனை
யுகமுழுகததடைவரினுமசையாதிற்பேன்
தற்பரனேதீக்ஷைசெய்யுங்கருணைவைத்து
சற்குருவேதிருவடியிறசரணென்றேனே. (எசு)

[குரு சொல்லுதல்]

வேறு.

ஞானமென்பதில்நாலவகையுண்டதை நாமுரைத்திடக்கேளாய், தானமுறறனர்சரியையுங்கிரியையுஞ்சாருமேசிவயோக, மோனமுற்றமெய்ஞ்ஞானமே நான்கதாமுடிவதைப்பெறுவாயே, யீனமறறவென்மைநதனேயுனிடவின்பமேதுரைபபாயே! (எஎ)

[ஜீவன் சொல்லுதல்.]

தேசிகாவிந்நால்வகையெனறதை தெரியவுமுரைத்திட்டால், மோசமாயினபமுற்றிருப்பது தனைமொழிக்கிடுமெனக்கேட்பேன், ஆசையற்றதாயிருந்திடி லுழைத்

திட வதிசயங்கொள்வேனுன், நேசமுற்றதிற்பத்தியே
யுறைத்திடில்நிலைததிடுமையாலே.　　　　　　　　(௭௮)

[குரு சொல்லுதல்]

அங்கசுத்தியுமாலையங்கொழுவதுஞ்சரியை யென்
றறைவார்கள், மங்களத்துடனட்டமாசித்தியும் வரை
யுஞ்சக்கரபூசை, பொங்கமானதுகிரியையாம் வாயுவை
பிரணடிடாதிழுத்திட்டு, தங்கிநின்றதோர்யோகமென்
றிதனையேசாற்றிடுமறைதானே.　　　　　　　　(௭௯)

ஞானமேதெனக்கேட்டிடின்தத்துவ நானெனவு
ணர்ந்திந்த, ஊனைநானெனவுரைததைதயகன்று பின்
னொழிவறத்தனைக்கண்டு, மானமவெட்கமுந்துக்கமுங்
கவலையும் வஞ்சனைதானபோக்கி, யீனமறறுநான்சிவ
மெனத்துணிந்தது மிழந்தது முடிவாமே.　　　　　　(௮௦)

[ஜீவன்கேட்க குருசொல்லுல்.]

இந்தாாவினிவினபமுற்றிருக்கையி விச்சடம்விழு
ந்திட்டால், தொந்தமானதோர்பலனென்ன தெரிந்திட
ச்சொலலுவாய்குருமூர்த்தி, சொந்தமாகவே கேள்மக
னேயதன்சுகமதையறிவிப்போம், தந்தனங்களாய்விடா
மலே கேட்பதுசரியெனை மகிழ்ந்தேனே.　　　　　　(௮௧)

சரியையென்பதுகுறைவறச் செய்துமேதன்கடம்
விழுந்திட்டால், கிரியைசெய்யவேயெடுத்திடுங்கடமது
கிரியையுமுடிந்தேகில், உரிசையாகியயோகமே செய்ய

வுமுடலெடுத்துழைக்குங்காண், பரிசொள்யோகமு மு
ற்றவுமுடிந்துடற்பாரினிலுருவாமே. (அஉ)

ஞானமேபெறவெடுத்திடுமவ்வுடல்நழுகிடாதுரை
த்திட்டா, லீனமாகிபசெனனமும்போக்கிடுமீசனே தா
ஞூ, வானமுற்றதோர்சச்சிதானந்தமாய் வாக்குரைக
கெட்டாத, மோனமுற்றுதானெக்குமாய் நிறைந்தது
முத்தியென்றுணர்வாயே. (அங)

[ஜீவன் சொல்லுதல்.]

அப்பனேயெனையடிமையாககொண்ட வோரபூகு
ள்ளகுருமூர்த்தி, தப்பிவகெதிலேனெனக்கிலலைநின்ரு
ளதுகெதியென்றேன, ஓபவேசிவஞானமுமுணாத்தி
டிலுகர்ந்தி லூறிக்கொண, டிபபவேபரவீடதிலேகு
வனீசனேயருளவாயே (அச)

[குரு சொல்லுதல்]

வேறு.

தத்துவமேயுடல்தானெனுமானதுதன்னையறிந்தி
டுநீ, சித்ததுவாயபிராணனிரானதில திரண்டதைக்க
ண்டிடுநீ, சுற்றுமேகாணுக்கண்மணியானதை கண்டு
தெளிந்திடுநீ, முற்றுசிவானந்தபோதகமானதுமுத்தியு
மிதுதானே. (அரு)

வேறு.

அறிவுபோதகமென்றநூலைப்பாரு
அதற்குமுன்னேஉடலறியும்விளக்கம்பாரு

பிறிவின்றிமேவின்றிமறைப்புமின்றிப்
பேரின்பவமுதமழைபெய்தநூல்தான்
நெறிகொண்டவந்நூலையிசைந்துபாரு
நிலைக்கவேயப்படியேதீக்ஷைவைப்போம்
பொறிவிட்டுசைவபுகுவாய்பிக்கோயில்லை [ள்ளே.
பெரும்பொருளைக்கைக்கொண்டுபிழைத்துக்கோ

[ஜீவன் சொல்லுதல்.]

அப்படியேபோதிசகமுத்திபெற்றேன்
ஆரியனுங்காணுதவடிவுங்கண்டேன்
தப்பியேயினைக்காமறபிழைத்துக்கொண்டேன்
சஞ்சலத்தையிழந்துநானசுகத்தைப்பெற்றேன்
ஒப்புவமைசொலலவொருவரையுங்காணேன் [ன்
உனைப்போலெதெளிவுரைசகுக்குருவுங்காணே
செப்பவேநாவிழந்தேன்பரமானந்தத்
தீவிலேசேர்ந்திட்டேன்வாழ்ந்திட்டேனே. (அஎ)

ஞானியெனறபெயர்களையேகண்டுகொள்ள
நல்லதொருகணபெற்றேனபேசவென்று
வீனமறச்சொறகற்றேன்சிரவணத்தால்
ஏகாந்தபரகவனமெய்தலானேன்
மானமற்றவடியருடனுசைகொண்டேன்
மருவுமுடலகுருவுக்கேவணங்கிபெற்றேன்
தானமுற்றேன்சிவானந்தந்தனிலேநின்றேன்
சச்சிதாநந்தனென்றேதழைத்திட்டேனே. (அஅ)

வாழ்வுமுதற்சம்பத்தைமதித்திடாமல்
மலைமேலேயேறினதோர்பறவையானேன்
தாழ்வுகளாயுலகோர்சொல்நிந்தையெல்லாம்
சகாயமெனவேயெண்ணிசசந்தோஷமானேன்
வீழ்வதருநரகிலுள்ளமாண்பர்கெல்லாம்
விழாமலேமனிதர்மேலுமானேன்
ஏழுலகுமமேலேழுமகானேயானேன்
ஏகாந்தத்தீவினிலேயிறங்கினேனே. (அசு)

[நந சொல்லுதல்]

மைந்தனேயுனைப்போலவேவாடிமெள்ள
வாதனையேதீர்ந்துமதிமயங்கிடாமல்
பந்தமறுத்தேபிசபுகுருவைததேடி
பரமாகிவாழ்ந்தவர்களுண்டோவப்பா
சிந்தையற்றபெரியோரைவணங்கிக்கொள்ளு
சிவஞானிதனனுடனேநேசஞ்செய்தே
எந்தனையேபெற்றவனேயப்பாவபபா
வெடுத்தனைத்தேயம்பரத்திலிருபபோர்காமே ()

[ஜீவன் சொல்லுதல்]

வெண்பா.

மறந்தேனோர்வார்த்தைதமகிழ்ஞானமூர்த்தி
துறந்தேனினித்தெரியச்சொலவாய்-சிறந்திலகு

பத்திசெய்வோருக்குப்பலனேதகைக்கெடுக்கும்
குதநிராருக்கென்னகுணம். (௬௧)

[தரு சொல்லுதல்.]

விருத்தம்.

எண்ணிலாத்தலங்களியாகங்கள் செயினுமீஸ்வர விஷ்ணுவாலயங்கள், பண்ணுலாக்கவிதை பாடினுமனேகம்பாரினிலவருமபலனேது, கணணுலாவியநறசுருதிமெய்ப்பொருளைக் கணடரனடியாருக், குணணலாமெனவமுதளித்தவனடைபல னுணாககவுமுடியாதே ()

வேதமாகமசாத்திர புராணங்கள விரிந்தநூலறிந்திடாவிந்து, நாதமேயுருவாமதவிதானந்தஞானமேபெற திடவேணடின, ஓதுமலவாசததுச் சித்தானந்தமுறற நல்லடியோாககுப, பாதபூஜைகளடசைலுஞ் செய்தவர் பலனுணாக்கடங்காதே. (௬௩)

கலித்துறை.

அன்னமளிப்பாரைக்கலைபபாருமிந்தவனிமிசை பின்னலவாசகுட புரிவார்நினைபபாரிகழ்ந்திடுவார் மனனவராயிருநதேமறுபபாாையுமறலியினி யெனனெனனவேதனைசெய்வான்முடிவிலையமபரிசே ()

சிவனருள்பெற்றுயர் மேலோா தமக்குஞ்சிவனையுன்னிச், தவஞ்செயுமனபர்க்குஞ்சிவவேடம் பூண்டதன்

னியர்க்கு, மூவந்தேபணிபுரிவார்மேலுலக ருண்மைய
தாய், அவஞ்செய்தவனையிகழ்வோரடைவரருநரகே. ()

பெரியோர்க்குத்தொண்டுசெய்வானைத்தடுத்திடுமே பேதையரும், சரியாகுநிலைசார்ந்தவர்க்கல்லல் சமைப்பவரும், பரிவானதீட்சைகொண்டோரை மறிக்குமபாதகரும், எரிவாயநரகத்தெண்ணிற றுயரிலிருப்பனென றும். (கூசு)

வெண்பா,

இந்நூலைப்பார்ப்போர எடுப்போர்படிப்போர்
நன்னூலெனமனதிறுவோர-பொன்னூற்
படியேறித்தாண்டப பசாகரத்தைக்
கடவுளக்கு முன்னிறபர்காண். (கூஎ)

சந்தேகமாதிகளைச சாராமலேயகற்றிப்
பந்தபாசங்களைப் பாழாக்கும - இந்தநூல்
எந்நாளுமமழியா யேகாந்தவீடதனைச
சொந்தமாக்கு மெனவேசொல். (கூஅ)

கலிவிருத்தம.

அரனைங்கிரிவாழி யம்பிகைதாள்வாழி
பெருமானபதமவாழி பின்னைசரணமவாழி
பரமேட்டியடிவாழி பாரதிபாதமவாழி
கரிமுகன்கழல்வாழி கந்தனதிருவடிவாழியே. (கூகூ)

கொச்சகம்.

வான்வாழிவானேபளி மாதவரும்வாழி
கோன்வாழி தருவாழி குவலயத்தோர்வாழி
ஆன்வாழியமராமுதலிருடிசித்தர்வாழி
ஞானநீயெனகமற்ற ஞாதாக்கள்வாழி. (௧00)

சிவானந்தபோதம் - முற்றிற்று.

சற்குருவே துணை.

உ

வேலுமயிலுந்துணை.

இப்போதச்சிட்டிருக்கும்

சுத்தப்பிரதிகளாவன —

—— ·0 ——

சுப்பிரமணியபண்டிதர் ஜீவரக்ஷாமிர்தம்	-	௪—0—0
பாலகாண்டமூலமும் உரையும்	- - -	௩—அ—0
பெரியபுராணம் (செய்யுள்)	- -	௩—அ—0
திருவிளையாடற்புராணம் (செய்யுள்)	- -	௨—0—0
வமலராமாயணமென்னுட ஞானவாசிட்ட வசனம்		௧—அ—0
வள்ளலார்சாத்திரம	- - -	௧—அ—0
திருமந்திரம் - ௩௲	- - -	௧—அ—0
ஞானப்பிரகாசதீபிகை உ-(அண்டகோளபடங்கள்)		௧—௪—0
மேற்படி ஆப்பவுண்டு	- -	௧—0—0
டாடுதுறை	- - - -	0-௧௨—0
கந்தபுராணச் சுருக்கம்	- - -	0—௧0—0
குமாரதேவர்சாத்திரம்-௧௬ உள்ளது(காலிக்கோ)	-	0—௧0—0
மேற்படி ஆப்பவுண்டு	- -	0—அ—0
விஷ்ணுதலமான்மியச சுருக்கம்	- -	0—அ—0
சடாட்சரமாறல் ௯-யந்திரங்களுடன	- -	0—௨—0
கைவல்யம் மூலம்	- - -	0—௨—0
அஷ்டோத்திரம்	- - - -	0—௧—0
புசண்டாஉபநிடதம (௩௨)	- - -	0—0—௬
கந்தர்சஷ்டிகவசம்	- - -	0—0—௬

இவை சிதம்பரம் மேல்கோபுரமண்டப புத்தகஷாப்பிலும், சென்னை மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

தோ-லோகநாதமுதலியார்.

௨௯-நெ. ஆயலூர் முத்தியாமுதலியார் வீதி சென்னை.